தருகிறேன் என்றுதான் சொன்னேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அவர் வைப்பதற்கு முன்னதாகவே பேச வாய்ப்புக் கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டனர்.)

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து அரசினர் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதெல்லாம் முறையில்லை. (குறுக்கீடுகள்) ஒரு அறிக்கையை இதுமாதிரி செய்வது முறையற்ற செயல். (குறுக்கீடுகள்) இல்லை, இதெல்லாம் முறையற்ற செயல். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற அவை உரிமைக் குழுவின் அறிக்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (அ)-ன்கீழ் (குறுக்கீடுகள்) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)